(P.4/4) 1997/11

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

கல்வித் தகுதி - பொதுப் பணிகளில் நியமனம் செய்ய குவாலியர் மற்றும் திருவனந்தபுரம் லட்சுமிபாய் தேசிய உடற்பயிற்சிக் கல்வி கல்லூரியால் வழங்கப்படும் இளங்கலை உடற்பயிற்சிக் கல்வி பட்டப் படிப்பை (B.P.E. Degree) சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் உடற்பயிற்சிக் கல்வி பட்டப் படிப்பிற்கு (B.P.Ed.) இணையானதாக கருதி அங்கீகாரம் செய்தல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசாணை (நிலை) எண்.273 நாள் 18.11.1997.

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 20.12.1993.

2. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை இயக்குநரின் கடித எண்.எப்.6-2/89-D/III/PE, நாள் 17.02.89.

3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளரது கடித எண்.4707/ B.A-3/89, நாள் 22.11.1990 மற்றும் கடித எண்.1785/RND-A5/94, நாள் 14.05.1997.

--------------

ஆணை:

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தைச் சார்ந்த இளைஞர் மற்றும் விளையாட்டுத் தறை இயக்குநர் அவர்கள் திருவனந்தபுரத்திலுள்ள லட்சுமிபாய் தேசிய உடற்பயிற்சிக் கல்வி கல்லூரியால் வழங்கப்படும் உடற்பயிற்சிக் கல்வி பட்டப் படிப்பை பிற மாநிலங்களில், முதுநிலை உடற்பயிற்சிக் கல்வி பட்டயத்திற்கு சமமானதாக அங்கீகரிக்காததால் இப்பட்டம் பெற்ற மாணவர்கள் வேலை வாய்ப்புப் பெற சிரமப்படுவதாகவும் இக்கல்வி நிறுவனம் மத்திய அரசால் நிறுவப்பட்டது எனவும், எனவே, பள்ளிகளில் உள்ள உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் அல்லது உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர் அல்லது கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் உள்ள உடற்பயிற்சிக் கல்வி போதகர் மற்றும் இதுபோன்ற பதவிகளில் வேலை வாய்ப்பிற்குரிய கல்வித் தகுதியாக இதனை அங்கீகாரம் அளிக்குமாறு மாநிலங்களைக் கேட்டுள்ளார்.

2. மத்திய அரசின் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை இயக்குநர் அவர்களின் அங்கீகாரம் குறித்த கோரிக்கை சென்னை பல்கலைக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்து பரிசீலனை செய்யப்பட்டு, இப்பொருள் குறித்து 20.12.1993 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறையின், அரசாணை நிலை எண்.441-ல் ஆணையிட்டவாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவரை தலைமையாகக்

கொண்டு இதற்கென அமைக்கப்பட்டக் குழுவின் (Committee) முன்னர் குழுவின் பரிந்துரைக்காக வைக்குமாறு அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. 11.04.1997 அன்று நடந்த அக்குழுக் கூட்டத்தில் தீவிர விவாதத்திற்குப்பின் குவாலியர் மற்றும் திருவனந்தபுரத்திலுள்ள லட்சுமிபாய் தேசிய உடற்பயிற்சிக் கல்வி நிறுவனம் வழங்கும் பட்டப் படிப்பை (B.P.E.) அரசுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்குத் தகுதியாக சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் உடற்பயிற்சிக் கல்வி பட்டத்திற்கு (B.P.Ed) இணையாகக் கருதலாம் என இக்குழு தீர்மானித்து அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

4. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே குவாலியர் மற்றும் திருவனந்தபுரம் லட்சுமிபாய் தேசிய உடற்பயிற்சிக் கல்விக் கல்லூரியால் வழங்கப்படும் இளங்கலை உடற்பயிற்சிக் கல்வி பட்டப் படிப்பை (B.P.E. Degree) சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் உடற்பயிற்சிக் கல்வி பட்டப் படிப்பிற்கு (B.P.Ed.) இணையானதாகக் கருதி அரசுப் பணிகளில் வேலை வாயப்பிற்குத் தகுதியாக அங்கீகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.பாஸ்கரதாஸ்,
அரசு செயலாளர்.

பெறுநர்

1. அனைத்துச் செயலாளர்கள், தலைமைச் செயலகத் துறைகள், சென்னை - 9.
2. அனைத்துத் துறைத் தலைமை அலுவலர்கள்,
3. இயக்குநர், மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை, புது தில்லி.
4. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை -2.
5. பதிவாளர், சென்னை பல்கலைக் கழகம், சென்னை - 5.

<u>நகல்</u>

1. அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
2. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை-9.
3. உயர்கல்வித் துறை, சென்னை -9.
4. முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.

// பணிந்தனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்